நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 1100

First Published : 24 Jun 2011 10:40:24 AM IST

காஞ்சிபுரம், ஜூன் 23: காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் சன்னரகம் குவிண்டால் ரூ. 1100-க்கும், பொதுரகம் குவிண்டால் ரூ. 1050-க்கும் கொள்முதல் செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சியர் எஸ். சிவசண்முகராஜா (படம்) தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம்:

விவசாயிகளின் நெல் மூட்டை 40 கிலோ எடையுள்ள மூட்டையாகவும், கோணியுடன் சேர்த்து 40.700 கிலோ எடை கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஈரப்பதம் 17 சதவீதத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும். விவசாயிகள் சுத்தமான நெல்லை கொண்டுவர வேண்டும்.

இல்லையெனில் கொள்முதல் நிலையத்தில் இயந்திரத்தின் மூலம் நெல் தூற்றி சுத்தம் செய்து எடைபோடப்படும். இதற்கான கூடுதல் செலவை நிர்வாகமே ஏற்றுக் கொள்ளும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 25 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படுகின்றன.

கொள்முதல் நிலையங்கள் காலை 9.30 மணி முதல் மதியம் 1.30 மணிவரையும், மதியம் 2.30 மணி முதல் மாலை 6.30 மணிவரையும் செயல்படும். விவசாயிகள் கொள்முதலுக்கு நெல் கொண்டு வந்தவுடன் முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து அடையாள அட்டை வழங்கப்படும்.

மேலும் விவசாயிகள் மட்டுமே நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்வதை உறுதி செய்ய தங்கள் நிலத்திற்கான உரிய சிட்டா நகல்களுடன் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விவசாயிகள் அரசு நிர்ணயித்த விலையில் தங்கள் நெல்லை தரமானதாக்கி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் விற்று பயன் அடையலாம் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மீன் குஞ்சு வளர்க்க ரூ.1.5 லட்சம் மானியம்**

First Published : 24 Jun 2011 11:18:25 AM IST

சிவகங்கை, ஜூன் 23: சிவகங்கை மாவட்டத்தில் மீன் குஞ்சு வளர்ப்புத் தொழில் செய்பவருக்கு மானியத் தொகையாக ரூ.1.5 லட்சத்தை மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) சு.வேம்புலிங்கம் வழங்கினார்.

2009-10-ம் ஆண்டு, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்ட நிதியுதவியில் மீன் குஞ்சு வளர்ப்பு மையங்கள் அமைப்பதற்கு, 50 சதவீத மானியத் தொகை வழங்க அரசு உத்தரவிட்டது.

அத்திட்டத்தின் கீழ் மானாமதுரை வட்டம், பாட்டம் கிராமத்தைச் சேர்ந்த து.உதயகுமார் ரூ.3 லட்சம் மதிப்பீட்டில் ஆண்டுக்கு ரூ.5 லட்சம் மதிப்பிலான மீன் குஞ்சுகளை வளர்க்கக் கூடிய அளவில், 1 ஹெக்டேர் பரப்பளவில் மீன் குஞ்சு வளர்ப்பு மையத்தை அமைத்து செயல்படுத்தி வருகிறார்.

அதற்கான அரசு மானியமாக ரூ.1.5 லட்சம் காசோலையை ஆட்சியர் வழங்கினார்.

மீன் வளத் துறை உதவி இயக்குநர் குணசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மைத் துறை) முத்துகிருஷ்ணன், மீன் வளத் துறை ஆய்வாளர் ஜெயக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

**ரூ. 50,000 கோடி உணவு தானியங்கள் வீணாகின்றன**

First Published : 24 Jun 2011 01:05:52 PM IST

தஞ்சாவூர், ஜூன் 23: இந்தியாவில் ஆண்டுக்கு ரூ. 50,000 கோடி உணவு தானியங்கள் வீணாகின்றன என்றார் மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் தொழில் அமைச்சக இணைச் செயலர் அஜித்குமார்.

இதுகுறித்து தஞ்சாவூரில் உள்ள இந்திய பயிர்ப் பதன தொழில்நுட்பக் கழகத்தில் அவர் வியாழக்கிழமை அளித்த பேட்டி:

உணவுப் பாதுகாப்பு என்பது உலகளவில் சவாலானது. இந்தியாவில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்களில் ஆண்டுக்கு 35 சதம் வரை யாருக்கும் பயனின்றி வீணாகின்றன. இதன் மதிப்பு சுமார் ரூ. 50,000 கோடி.

எனவே, உற்பத்தியைப் பெருக்குவதுடன், உணவுப் பொருள்கள் வீணாகுவதைத் தடுப்பதன் மூலமே இத் துறையில் தன்னிறைவு என்பது சாத்தியமாகலாம். அதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

இந்தியாவைவிட குறைந்த அளவில்தான் சீனா, வங்கதேசம் ஆகிய நாடுகளில் உணவுப் பொருள்கள் வீணாகின்றன.

இந்திய பயிர்ப் பதன தொழில்நுட்பக் கழகம் 18 வகையான உணவு வகைகளுக்கு பேட்டன் உரிமம் கோரியது. அதில் 10 வகையான உணவு வகைகளுக்கு உரிமம் கிடைத்துள்ளது. இது. இந்த நிறுவனத்திற்கு மிகவும் பெருமை அளிக்கக் கூடியது.

உணவு பதப்படுத்துதல் துறையில் விஞ்ஞானிகளின் பங்கு கடந்த இரு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இதனால், பல புதிய பரிமாணங்களை இந்தத் துறை எட்டியுள்ளது.

இங்கு பயிலும் மாணவர்களை கள ஆய்வுத் திட்டப் பணிகளில் ஈடுபடுத்த இருக்கிறோம். நிகழாண்டு 400 இடங்களில் கள ஆய்வு திட்டப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

விளை பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளை நேரடியாகச் சந்தித்து, அவர்களின் கோரிக்கைகளைக் கேட்பதும் இந்தத் திட்டத்தில் ஒன்றாகும். கள ஆய்வுத் திட்டத்திற்கு 40 மாணவர்களைத் தேர்வு செய்வோம். அவர்களை மூன்று மாணவர்கள் வீதம் குழுக்களாகப் பிரித்து, கிராமங்களுக்கு அனுப்புவோம்.

ஆண்டுக்கு ஒரு முறை ஒவ்வொரு குழுவினரும் ஒரு கிராமத்திற்குச் சென்று தங்கியிருந்து, ஆய்வுத் திட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

முதல் கட்டமாக, ஒரு வாரம் கிராமத்தில் தங்க வேண்டும். கிராமத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகளை அவர்கள் சந்தித்து, அந்தக் கிராமத்தின் வேளாண் வளம், அவர்களுக்கான தேவைகள், உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கான வழிகள் குறித்து மாணவர்கள் ஆய்வு செய்வர்.

உற்பத்தியாகும் உணவு தானியங்கள், பயன்பாட்டிற்கு முன்னதாகவே பல்வேறு கட்டங்களில் வீணாகுவதைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆய்வில் கண்டறிந்து, உரிய ஆலோசனை தெரிவிக்கப்படும்.

இரண்டாவது ஆண்டில் அதே மாணவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, அங்கு உணவு உற்பத்தியில் உள்ள புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

வெளிநாட்டுக் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்களை அழைத்து, மாணவர்களுக்கு வகுப்புகளும் நடத்தப்படும்.

இப்போது தஞ்சாவூர் பயிர்ப் பதனத் தொழில்நுட்பக் கழகத்தில் உணவுப் பதப்படுத்துதலில் 29 விஞ்ஞானிகள் பணியாற்றுகின்றனர். இந்த எண்ணிக்கை வரும் ஆண்டில் 42 ஆக அதிகரிக்கப்படும். இங்கு சர்வதேசத் தரத்திலான 8 உணவுப் பரிசோதனை தொழில்கூடங்கள் இருக்கின்றன. இவையும் அதிகப்படுத்தப்படும்.

பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளை இருப்பு வைக்க, பாதுகாப்பான சேமிப்பு மையங்கள் கிராமங்கள்தோறும் விரிவுபடுத்தப்பட வேண்டும். சிறிய விற்பனை நிலையங்களைத் தொடங்க

தனியாருக்கு அனுமதி அளித்து, உபரி வருவாய் கிடைக்கச் செய்ய வேண்டும். இந்தப் பணிகள் வரும் ஆண்டுகளில் விரிவாக்கப்படும்.

உணவுப் பதப்படுத்துதலில் தொழில், ஆராய்ச்சி வாய்ப்புகள் குறித்த இரு நாள் தேசியக் கருத்தரங்கம் தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை தொடங்குகிறது. 40 முதன்மை விஞ்ஞானிகள், விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்கின்றனர் என்றார் அஜித்குமார். பேட்டியின் போது மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் தொழில் அமைச்சகத் துணைச் செயலர் ரூபாலி பானர்ஜி, தஞ்சாவூர் இந்திய பயிர்ப் பதன தொழில்நுட்பக் கழக இயக்குநர் கே. அழகுசுந்தரம் ஆகியோர் உடனிருந்தார்.

தினமலர்

**நெல் உற்பத்தியில் உலகம் புதிய சாதனை படைக்கும்**

ஜூன் 25,2011,00:00



புதுடில்லி: நடப்பு 2011ல், உலகளவில் நெல் உற்பத்தி 71.30 கோடி டன்னாக உயர்ந்து, புதிய சாதனை படைக்கும் என, ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண் துறை தெரிவித்துள்ளது.சென்ற 2010ம் ஆண்டு, சர்வதேச அளவில் நெல் உற்பத்தி, 69.60 கோடி டன் என்ற புதிய சாதனை அளவை எட்டியது. மேலும், நெல் அரவைக்கு பிறகான அரிசியின் அளவு, முந்தைய ஆண்டை விட, 1.8 சதவீதம் அதிகரித்து, 46.40 கோடி டன்னாக உயர்ந்து, புதிய சாதனை படைக்கப்பட்டது. நடப்பாண்டு, இந்த சாதனை முறியடிக்கப்படும் என, ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண் துறை வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.நடப்பாண்டில் பருவ நிலை சாதகமாக உள்ளதால், சர்வதேச அளவில் நெல் உற்பத்தி, சென்ற ஆண்டை விட, 2.5 சதவீதம் அதிகரித்து, 71.13 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து நெல் அரவைக்கு பிறகான அரிசியின் அளவும், 47.60 டன் என்ற அளவில் அதிகரிக்கும் என மதிப்

பிடப்பட்டுள்ளது.ஆசிய அளவில் நெல் உற்பத்தி 2.5 சதவீதம் உயர்ந்து, 64.50 கோடி டன் என்ற அளவை எட்டும். நெல் அரவைக்கு பிறகான அரிசியின் அளவும் 43 கோடி டன்னாக உயரும். இந்தியா, சீனா, பாகிஸ்தான் நாடுகளில் நடப்பாண்டு நெல் விளைச்சல் அதிகம் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.இந்தியாவை பொறுத்தவரை, நடப்பு 2010-11ம் பருவத்தில், நெல் அரவைக்கு பிறகு கிடைக்கும்,அரிசியின் அளவு அரிசி உற்பத்தி 9.41 கோடி டன்னாக இருக்கும் என,மத்திய வேளாண் அமைச்சகத்தின் மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதே சமயம், தொடர் மழை மற்றும் வெள்ளம் காரணமாக இலங்கையின் நெல் உற்பத்தி குறையும். நிலநடுக்கம், "னாமி தாக்குதல், அணு உலை கசிவு உள்ளிட்டவற்றால் ஜப்பானிலும் நெல் உற்பத்தி சரிவடையும் என கணிக்கப்பட்டுள்ளது.ஜப்பானில், "னாமி தாக்குதலால் டொஹொகு மாவட்டத்தில் நெல் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் 43 ஆயிரம் எக்டேர் பயிர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளதால், 3 லட்சம் டன் நெல் உற்பத்தி குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ஜப்பானில் நெல் உற்பத்தி 3 சதவீதம் குறைந்து, ஒரு கோடி டன் என்ற அளவிற்கு இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.ஆப்ரிக்காவில் நடப்பாண்டு நெல் உற்பத்தி, கடந்தாண்டு போலவே இருக்கும். மேற்கு ஆப்ரிக்காவில் நெல் உற்பத்தி உயரும் என்ற போதிலும், எகிப்து, மடகாஸ்கர் நாடுகளில் நெல் உற்பத்தி குறையும் என, ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண் துறை தெரிவித்துள்ளது.கடந்தாண்டு லத்தீன் அமெரிக்கா, கரீபியன் நாடுகளில் குறைந்திருந்த நெல் உற்பத்தி நடப்பாண்டில் அதிகரித்துள்ளது. அர்ஜென்டினா, பிரேசில், கொலம்பியா, உருகுவே, வெனி"லா நாடுகளில் நெல் உற்பத்தி உயர்ந்துள்ளது.

**விதைகளுக்கு புறத்தூய்மை பரிசோதனை விதைப்பரிசோதனை அலுவலர் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2011,01:09 IST

திருநெல்வேலி : விதைகளுக்கு புறத்தூய்மை பரிசோதனை செய்ய வேண்டும் என விதைப்பரிசோதனை அலுவலர் தமிழ்மலர் தெரிவித்தார்.
நெல்லை விதைப்பரிசோதனை அலுவலர் தமிழ்மலர் அறிக்கை: விதை உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் உற்பத்தி, விற்பனை செய்யும் விதைகள் அதிக அளவு சுத்தத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். பயிர் அறுவடை முடிந்து கதிர்அடித்து பிரிக்கப்பட்டு எடுக்கப்படும் விதைக்குவியல்களில் இருந்து கிடைக்கும் விதைகள் உடவே விதைப்பதற்கோ, நடவு செய்வதற்கோ தகுதியானதாக இருக்காது. அந்த விதைகளுடன் மண், சிறுகற்கள்,

இலைகளின் துகள்கள், குச்சி, சாவி விதைகள் கலந்து இருக்கும். அறுவடை முடிந்து பிரித்தெடுக்கப்படும் விதைகள் சுத்திகரிப்பு செய்து சுத்தமாகவும், பிற பொருட்கள் கலப்பு இன்றியும் இருக்க வேண்டும். சுத்தமான விதைகள், விதைப்பின் போது சீராக விதைப்பதற்கும், வேண்டிய அளவு பயிர் எண்ணிக்கை பராமரிப்பதற்கும் எளிதாக இருக்கும்.

நெல்லை விதைப்பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. புறத்தூய்மை சோதனையின் போது தூய விதைகள், களை விதைகள், பிற ரக விதைகள், உயிர்ப்பற்ற பொருட்கள் கலந்துள்ளனவா என கண்டறியப்படுகிறது. ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச தரம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வெண்டை 99 சதவீதம், கேழ்வரகு, எள் 97 சதவீதம், நிலக்கடலை, பீட்ரூட், முருங்கை 96 சதவீதம், பீன்ஸ், கீரை, மல்லி 95 சதவீதம், இதரப்பயிர்களுக்கு 96 சதவீதம் புறத்தூய்மை இருக்க வேண்டும். விதை மாதிரிகளில் புறத்தூய்மை பரிசோதனை செய்து நல்விதையாக விதைத்து நல்ல மகசூல் பெறலாம். இவ்வாறு விதைப்பரிசோதனை அலுவலர் தமிழ்மலர் தெரிவித்தார்.

**பேய்க்குளத்தில் விவசாயிகள் சங்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2011,01:18 IST

பேய்க்குளம் : பேய்க்குளத்தில் செங்குளம், பெரியகுளம் விவசாயிகள் சங்க கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மணிமுத்தாறு 3வது, 4வது ரீச் விவசாயிகள் சங்க தலைவர் காசியனாந்தன் தலைமை வகித்தார். செங்குளம்,பெரியகுளம் விவசாயிகள் சங்க தலைவர் முருகேசன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் இளமால்குளம் விவசாயிகள் சங்க தலைவர் பொன்கந்தசாமி, ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்கள் அந்தோணிராஜ், கோவிந்தராஜ், கிள்ளிகுளம் வேளாண் மை கல்லூரி உதவி பேராசிரியர் மணிவண்ணன், தோட்டக்கலைத்துறை அலுவலர் அல்லிராணி, திருச்செந்தூர் வேளாண்பொறியியல்துறை உதவிஇயக்குனர் சேர்மராஜ், இளநிலை பொறியாளர் மரியபாக்கியம், துணை வேளாண் அலுவலர் சண்முகசுந்தரம், உதவி வேளாண் அலுவலர் கண்ணன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில் 2½ லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டம் வடக்கு கோட்ட வன அலுவலர் தகவல்



வனத்துறை நர்சரியில் நடவுக்கு தயாராக உள்ள சில்வர் ஓக் மரக்கன்றுகளை படத்தில் காணலாம்.

குன்னூர், ஜூன்.25–

நீலகிரி மாவட்டத்தில் 2½ லட்சம் மரக்கன்று கள் நடவு செய்ய திட்ட மிடப்பட்டு உள்ளது என்று வடக்கு கோட்ட வன அலுவலர் தெரிவித்துள்ளார்.

**பருவம் தவறாமல் மழை**

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு மரங்கள் அடர்ந்து வளர்ந்து இயற்கை சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பாக இருந்தது. இதன் காரணமாக பருவம்

தவறாமல் மழை பெய்து வந்தது.
காலம் செல்ல, செல்ல மரங்கள் வெட்டப்பட்டதால் இயற்கை சூழல் பாதிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் மனிதர் களின் வாழ்க்கைக்கு மரங்கள் தேவைப்படுகின்றன. அனுமதி யின்றி மரம் வெட்டுவது பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது.

**அறிவுரைகள்**

இதனை கருத்தில் கொண்டு வரைமுறைபடுத்திய சுப்ரீம் கோர்ட்டு, மரக்காடுகளை இயற்கை காடுகள் மற்றும் வளர்ப்பு காடுகள் என இரு பிரிவாக பிரித்து உள்ளது. இயற்கை காடுகளை பாது காக்க அரசு உரிய கண் காணிப்பு ஏற்பாடுகளை செய்து வருகிறது. வளர்ப்பு காடுகளில் சில நிபந்தனைகளுக் குட்பட்டு மனிதர் தேவைக்கு என ஒரு குறிப்பிட்ட அளவு மரங்களை வெட்டி எடுத்து கொள்ள அரசும், கோர்ட்டு களும் அறிவுரைகளை வழங்கி உள்ளன.
இதன்படி தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்த திட்டத்தின் படி மண் வகைகளுக்கு ஏற்றாற் போன்று தேக்கு, சவுண்டல், இலவம் பஞ்சு மறறும் சில்வர் ஓக் மர வகைகள் நடவு செய்து வளர்க்க சிபாரிசு செய்யப்படு கின்றன.

**முதன்மை**

இது குறித்து நீலகிரி மாவட்ட வடக்கு கோட்ட வன அலுவலர் ராமசுப்பிர மணியன், குன்னூர் வனச் சரகர் பால்ராஜ் ஆகியோர் கூறியதாவது:–
தனியார் நிலத்தில் மரம் வளர்த்தல் என்ற அரிய திட்டத்தை முன்னாள் கூடுதல் முதன்மை தலைமை வன பாதுகாவலர் டாக்டர் குமா வேலு கொண்டு வந்தார். இந்த திட்டம் நமது நாட்டிலேயே தமிழகத்தில் தான் முதன்மை யாக உள்ளது. ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் செயல் படுத்தப்பட்டு வரு கிறது. மண் வகைகளுக்கு தகுந் தாற் போன்று மரக்கன்றுகள் நடவு செய்யப்படுகின்றன.
மலை மாவட்டமான நீலகிரியில் விரைவில் வளர்ந்து பயன்தரும் சில்வர் ஓக் என்று அழைக்கப்படும் சைபர் மரங்கள் தனியார் நிலத்தில் வளர்க்க மரம் வளர்ப்பு திட் டத்தில் பரிந்துரை செய்யப் படுகின்றன. இந்த திட்டத்தின் கீழ் $2\frac{1}{2}$ லட்சம் அளவில் மரக்கன்றுகளை நடவு செய்ய கோவை வன மண்டல வன பாதுகாவலர் ஆணை

*பிறப்பித் துள்ளார். நன்கு பராமரிக்கப் பட்ட மரக் கன்றுகள் குன்னூர், மஞ்சூர், ஊட்டி, கட்டபெட்டு, கோத்தகிரி, சோலூர்மட்டம் ஆகிய வனத்துறை நர்சரிகளில் உள்ளது.*

***மானியம்***

*இவைகளை அந்தந்த பகுதி விவசாயிகள் சில ஆவணங் களை கொடுத்து இலவசமாக பெற்று கொள்ளலாம். வனத் துறை அலுவலர்கள் இதனை நடவு செய்யவும், தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கவும் உள்ளனர். மேலும் ஓராண்டிற்கு பின்னர் அவர வர் நட்ட செடிகளில் உயிருடன் உள்ள செடிகளை கணக்கு எடுத்து ஒவ்வொரு செடிக்கும் 5 ரூபாய் வீதம் வனத்துறை மானியம் வழங்க உள்ளது. இந்த திட் டத்தை விவசாயிகள் பயன் படுத்தி கொள்ள அழைக்கப்படு கிறார்கள். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.*

# பீட்ரூட்டை சுத்தம் செய்யும் விவசாயிகள்



நீலகிரி மாவட்டத்தில் கேரட், பீட்ரூட், பீன்ஸ் உள்பட பல்வேறு வகையான காய்கறிகள் பயிரிடப்படுகிறது. ஊட்டி அருகே உள்ள கல்லக்கொரை கிராமத்தில் அறுவடை செய்யப்பட்ட பீட்ரூட்களை தண்ணீர் ஊற்றி விவசாயிகள் சுத்தம் செய்யும் காட்சி.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,710-2,740

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
4,350-4,400

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
9,300-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,550-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரிஉள்பட) 1,917-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1 குவிண்டால் (வரிஉள்பட) 9,500-00
டின் (15 கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
10,600.00
15 கிலோடின் (வரிஉள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரிஉள்பட) 1,165.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின் (வரிஉள்பட) 1,560.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட) 1,110.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 548-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜூன்.24-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 11,500 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 3,800 | 106.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,960 | 110.00 |
| துபருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,300 | 38.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,400 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,000 | 46.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 4000 | 40.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,200 | 42.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 7,200 | 72.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,600 | 66.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,100 | 31.00 |
| சர்க்கரை | ரூ. 2,700 | 27.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஜூன்.22-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 5,905
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 8577
3. ஜெ 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 11,117
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,842
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 11,389
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 11,810
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 18,700

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜூன்.24-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 36-00 | காலிப்பிளவர் | ரூ. | 34-36 |
| கத்தரிக்காய் | ரூ. | 18-24 | பொறியல் தட்டை | ரூ. | 20-22 |
| வெண்டைக்காய் | ரூ. | 20-24 | தேங்காய் | ரூ. | 10-14 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 12-13 | பட்டாணி | ரூ. | 90-00 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 12-13 | பூண்டு | ரூ. | 95-00 |
| புடலை | ரூ. | 20-18 | கறிவேப்பிலை | ரூ. | 10-12 |
| பீர்க்கான்காய் | ரூ. | 22-24 | அகத்தி | ரூ. | 16-00 |
| சுரைக்காய் | ரூ. | 12-14 | வாழைக்காய் | ரூ. | 20-00 |
| பாகற்காய் | ரூ. | 17-23 | குடைமிளகாய் | ரூ. | 24-28 |
| கொத்தவரை | ரூ. | 15-14 | சாதா பீன்ஸ் | ரூ. | 20-24 |
| பூசணிக்காய் | ரூ. | 10-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 38-44 |
| அரசாணிக்காய் | ரூ. | 6-7 | கறிபீன்ஸ் | ரூ. | 26-00 |
| பேராக்காய் | ரூ. | 18-20 | புஸ்பீன்ஸ் | ரூ. | 34-36 |
| பச்சை மிளகாய் | ரூ. | 15-16 | காளான் | ரூ. | 80-150 |
| குண்டு மிளகாய் | ரூ. | 26-28 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11-13 |
| சின்னவெங்காயம் | ரூ. | 20-28 | மாங்காய் | ரூ. | 8-10 |
| பெரியவெங்காயம் | ரூ. | 12-00 | திராட்சை | ரூ. | 32-00 |
| இஞ்சி | ரூ. | 34-00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 17-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 24-26 | கொய்யா1கிலோ | ரூ. | 39-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18-24 | மாதுளை1கிலோ | ரூ. | 50-90 |
| சேனைகிழங்கு | ரூ. | 28-0 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 13-00 |
| கருணைகிழங்கு | ரூ. | 30-00 | வரமிளகாய் | ரூ. | 95-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | மாம்பழம் | ரூ. | 20-50 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | ஆப்பிள் | ரூ. | 115-130 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | சாத்துக்குடி | ரூ. | 33-00 |
| சிறுகிழங்கு | ரூ. | 30-00 | நெல்லிக்காய் | ரூ. | 30-32 |
| முள்ளங்கி | ரூ. | 16-18 | ஆரஞ்சு | ரூ. | 75-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 10-14 | வெள்ளரி | ரூ. | 12-24 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 16-20 | புளி 1 கிலோ | ரூ. | 75-00 |
| நூல்கோல் | ரூ. | 26-00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32-28 |
| கொத்தமல்லி | ரூ. | 34-36 | அவரை | ரூ. | 26-28 |
| ட்ரிளிப்ஸ் | ரூ. | 20-24 | நிலக்கடலை | ரூ. | 35-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-12 | மக்காச்சோளம் | ரூ. | 3-20 |
| கலர்கோஸ் | ரூ. | 15-00 | தர்பூசணி | ரூ. | 10-00 |
| புதினா | ரூ. | 16-00 | | | |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 25200 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 25,700 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 26,700 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 10,150 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 10,000 |
| சுக்கு (புதியது) | ரூ. 14000 |
| சுக்கு(பழையது) | ரூ. 11,200 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 10000 |
| கொப்பரை நாடன் | ரூ. 6650 |
| கொப்பரை ராசு | ரூ. 6850 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6800 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 7650 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7100 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 21600 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22400 |
| ரப்பர் பால் | ரூ. 10000 |
| காப்பி | ரூ. 10600 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3600 |
| நேந்திரகாய் | ரூ. 1350 |
| இஞ்சி | ரூ. 1200 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜூன்.24-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,660 | 108.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1140 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1210 | 78.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1040 | ——— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1140 | 71.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1650 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,020 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,550 | 100.00 |
| வனஸ்பதி | | |
| வில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1060 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,070 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,070 | - |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.188.00 | அதிகபட்சவிலை | ரூ.305.00 |
| சராசரி விலை | ரூ.168.07 | சராசரி விலை | ரூ.281.36 |
| குறைந்தபட்சவிலை | ரூ.147.00 | குறைந்தபட்சவிலை | ரூ.241.00 |

**பட்டு நூல் ரூ.1,720**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 17,784.00 | 16,768.00 | 16,800.00 |
| ஒரு கிராம் | 2,098.00 | 2,096.00 | 2,100.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 53,050.00 | 58,700.00 | 57,000.00 |
| ஒரு கிராம் | 56.70 | 56.700 | 57.00 |